எம்.சாண்டு, மணல், ஜல்லி விலையை

ரூ.1000 குறைத்து விற்க அரசு உத்தரவு

கிரஷர் உரிமையாளர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் முடிவு

சென்னை, ஏப். 28: கல்குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள் சமீபத்தில் விதிக்கப்பட்ட சிறு கனிம நிலவரி மற்றும் ராயல்டி உயர்வு உள்ளிட்ட 24 கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 16ம் தேதி முதல் கால வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர். அதாவது 2024க்கு முன் வெட்டி எடுக்கும் கனிமங்களுக்கு, கனமீட்டருக்கு 56 ரூபாய் ராயல்டி தொகை இருந்தது. 2024ம் ஆண்டில் ராயல்டி தொகை 90 ரூபாயாக உயர்த்தப்பட்டது. கடந்த ஏப்ரல் முதல் சிறு கனிம நிலவரி என்ற புதிய வரியை தமிழக அரசு விதித்தது.

மேலும் வெட்டி எடுக்கப்படும் கனிமங்களுக்கு கன மீட்டர் என்ற அளவில் விதிக்கப்பட்ட ராயல்டியை தற்போது டன் என்று அளவுக்கு மாற்றப்பட்டது. இதனால் 90 ஆக இருந்த ராயல்டி தொகை தற்போது 165 ஆக செலுத்த வேண்டி உள்ளது. இதன் காரணமாக ஒரு யூனிட் ஜல்லியின் விலை 1500 ரூபாய் வரை உயர்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே கல்குவாரியில் வெட்டி எடுக்கும் கனிமங்களை கன மீட்டர் அளவிலே கணக்கிட வேண்டும். டன் அளவில் கணக்கீடு செய்து ராயல்டி பெறக் கூடாது. மேலும் புதிதாக விதித்த சிறு கனிம நிலவரி விதிப்பை கைவிட வேண்டும் எனவும் அரசுக்கு கோரிக்கை விடுத்து இருந்தனர். இந்நிலையில் சென்னை, தலைமைச் செயலகத்தில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்த கல் குவாரி கிரஷர் உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் குவாரி கிரஷர் உரிமையாளர்கள் முன் வைத்த கோரிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி, கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் எம்-சாண்டு, பி சாண்டு மற்றும் ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்பட்ட விலையிலிருந்து ரூ.1000 குறைத்து விற்பனை செய்யப்படும் என்பதை அச்சங்கத்தினர் ஏற்றுக்கொண்டனர்.

மேலும், சாதாரண கற்கள் மீதான சீனியரேஜ் தொகையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.33 என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக தமிழக அரசு தரப்பில் தகவல் வெளியாகி உள்ளது. இதற்கான அரசாணை ஒருவார காலத்திற்குள் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் சரவணவேல்ராஜ், கிரஷர் சங்கத்தின் தலைவர் சின்னசாமி, சங்கத்தின் உறுப்பினர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

▶ சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, அமைச்சர் துரைமுருகன் தலைமையில் கல்குவாரி, கிரஷர்கள், லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திரரெட்டி, புவியியல், சுரங்கத்துறை ஆணையர் சரவணவேல்ராஜ், சங்க உறுப்பினர்கள், இணை இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி

தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர்கள் சங்கம் தலைவர் ஆர்.முனிரத்தினம் கூறியதாவது: தமிழ்நாட்டில் ஜல்லி, எம்.சாண்ட் உள்ளிட்ட கட்டுமானப் பொருள்களின் விலைகள் அண்மையில் உயர்த்தப்பட்டது. ஒரு யூனிட் ஜல்லி விலை ரூ.4 ஆயிரத்திலிருந்து, ரூ.5 ஆயிரமாகவும், எம்.சாண்ட் விலை ரூ.5 ஆயிரத்திலிருந்து ரூ.6 ஆயிரமாகவும், பி.சாண்ட் விலை ரூ.6 ஆயிரத்திலிருந்து ரூ.7 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டது. இதனால் கட்டுமானப் பணிகள் மேலும் பாதிக்கப்படும் அச்சம் ஏற்பட்டது. இதனால், கட்டுமான தொழிலாளர்களும் வேலை இழக்கும் சூழ்நிலை உருவானது. இதனால் குவாரி மற்றும் கிரஷர் உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த நிலையில் அவர்களை தமிழக அரசு அழைத்து பேசி பிரச்னைக்கு சுமூக தீர்வு கண்டுள்ளது. இதற்காக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கும், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகனுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு முழுவதும்

86,000 பேருக்கு பட்டா

சென்னை, ஏப்.28: தமிழ்நாடு முழுவதும் ஆட்சேபனையற்ற இடங்களில் குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 17ம் தேதி நடைபெற்ற மாநில அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி 86,000 பேருக்கு பட்டா வழங்கப்பட உள்ளது.

சென்னையைச் சுற்றியுள்ள 4 மாவட்டங்களில் 'பெல்ட் ஏரியா' எனப்படும் 32 கி.மீ பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து நீண்ட காலமாக குடியிருப்பவர்கள் மற்றும் இதர மாவட்டங்களில் ஆட்சேபகரமற்ற பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கான தடையை நீக்குவது தொடர்பாக, கடந்த பிப்.10ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி, சென்னையில் மட்டும் ஆட்சேபமற்ற புறம்போக்கு பகுதிகளில் 29,187 பேரும், இதர மாவட்டங்களில் 57,084 பேர் என, 86 ஆயிரம் பேருக்கு 6 மாதங்களில் பட்டா வழங்க வருவாய்த் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கான வழிகாட்டி விதிமுறைகள் கடந்த மாதம் வெளியிடப்பட்டன. அதில், குறிப்பிடப்பட்ட ஆண்டு வருமான வரம்பு உள்ளிட்ட சில விதிகள் தொடர்பாக, பல்வேறு கோரிக்கைகள் வந்ததால், திருத்தம் செய்யப்படும் என்று கூறப்பட்டது.

இதுதொடர்பாக, கடந்த ஏப்ரல் 17ம் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு அடிப்படையில் வழிமுறைகளில் திருத்தம் வருவாய் துறை அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி, குறிப்பிட்ட சில வகை புறம்போக்கு நிலங்களில், 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்போருக்கு பட்டா வழங்க, ஆண்டு வருமானம், ரூ.3 லட்சமாக இருந்தது. இந்த வரம்பு தற்போது, ரூ.5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், நில ஒதுக்கீட்டு வரம்புகளும் திருத்தப்பட்டுள்ளன. அதன்படி, ஆண்டு வருமானம், ரூ.5 லட்சமாக உள்ள குடும்பங்களுக்கு, 3 சென்ட் நிலத்துக்கு பட்டா வழங்கப்படும். அதில், 2 சென்ட் நிலத்திற்கு கட்டணம் எதுவும் இருக்காது. மீதமுள்ள ஒரு சென்ட்டுக்கு நில மதிப்பில், 25 சதவீத தொகையை செலுத்த வேண்டும்.

ஆண்டு வருமானம், ரூ.5 லட்சத்திற்கு மேல், ரூ.12 லட்சத்திற்குள்ள இருக்கும் குடும்பங்கள், 2 சென்ட்டுக்கு நில மதிப்பில், 50 சதவீத தொகையும், ஒரு சென்ட்டுக்கு நில மதிப்பில், 100 சதவீத தொகையையும் செலுத்த வேண்டும். ஆண்டு வருமானம், ரூ.12 லட்சத்திற்கு மேல் உள்ள குடும்பங்கள், 3 சென்ட்டுக்கும் நில மதிப்பில், 100 சதவீத தொகையை செலுத்த வேண்டும். நகர்ப்புறம், ஊரகம் இரண்டுக்கும் இந்த விதிமுறை பொருந்தும். என தமிழக அரசு வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

அரசாணை வெளியிட்டது தமிழ்நாடு அரசு

GOVERNMENT OF TAMIL NADU
DEPARTMENT OF HANDLOOMS

No.1/2025/J1, Dated.25.04.2025.

Design entries are invited from the interested participants belonging to the state of Tamil Nadu for Selection of State Level Best Designs from Young Designers.

The selected young designers will be awarded cash prize of Rs.1,00,000/-, Rs.75,000/- and Rs.50,000/- for First, Second and Third place respectively.

- The **Eligible Participants, Sub-Categories in Designs, Eligibility norms and Design entry conditions** are mentioned in guidelines.
- The guidelines, design entry form and details of address to which design should be sent are available on the websites **www.loomworld.in** and **www.tnhandlooms.tn.gov.in**
- The eligible participants who are interested to participate in the Selection of State Level Best Designs from Young Designers may submit design entries on or before **19.05.2025** to the circle Deputy Director / Assistant Director of Handlooms concerned.

Director of Handlooms
Department of Handlooms,
No.6, Chennai House, 4th Floor, Chennai- 104.

DIPR/ 417 /DISPLAY/2025

ஆவின்
காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
நெ. X-37, பால்பண்ணை, சிட்கோ தொழிற்பேட்டை, காக்களூர் அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம் – 602 003.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

காஞ்சிபுரம்–திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் கீழ் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் இருந்து பால் கொள்முதல் செய்து அருகாமையில் உள்ள பால்குளிரூட்டும் நிலையம், பால்பண்ணை மற்றும் தொகுப்பு பால்குளிரூட்டும் நிலையங்களுக்கு எடுத்து வந்து சேர்க்கவும், இன்புட் கார் –1 மற்றும் பால் விநியோகம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் வாகனம், 2025 – 2027 இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்த வாகனங்கள் இயக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது. இது தொடர்பான விவரங்கள் மின்னணு வாயிலாக (online e-tender) **www.tntenders.gov.in** என்ற இணைய தள முகவரியில் ஒப்பந்தப்புள்ளி **16.05.2025**க்குள் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பொது மேலாளர்,
காஞ்சிபுரம் - திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,

செ.ம.தொ.இ./1709/ஒப்பந்தப்புள்ளி/2025

நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது) பதிவு அலுவலகம்: 5–வது தளம், டவர் 3, விங் B, கோஹினூர் சிட்டிமால், கோஹினூர் சிட்டி, கிரால் சாலை, குர்லா (மேற்கு), மும்பை–400070. பிராந்திய அலுவலகம்: எண் 19, 7வது தளம், கோச்சார் டவர்ஸ், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை – 600017.

மின்–ஏல – சட்டப்படியான 30 நாள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 ஆகியவற்றின் கீழான மின்–ஏல விற்பனை

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மற்றும் தொகையுடன் கடன் நிலுவை பெற திரும்பப் பெறும் பொருட்டு "உள்ளது உள்ள இடத்தில் மற்றும் உள்ளது உள்ளபடி" "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் விற்பனை செய்யப்பட உள்ளது. குறிப்பிட்ட சொத்து கடன்தாரர்(கள்), உப கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு வழங்கப்பட்ட கடன்களுக்காக அவர்களால் M/s நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது) நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் கடனீட்டுச் சொத்து தற்பொழுது ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் அடையாளப்பூர்வ கவாதீனத்தில் உள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்) / உப கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	திரும்பப் பெறவேண்டிய தொகை	நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத் தொகை (EMD)	ஏல தேதி மற்றும் நேரம்
1.	பரமசிவம் ராசா (கடன்தாரர்), தங்கவாணன்னு P (உப கடன்தாரர்)	LSALSTH0000090922–க்கான 24.04.2025 தேதிப்படி ரூ.12,95,730/– (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எழுநூற்று முப்து மட்டும்) + மேல்வட்டி + சட்டச் செலவுகள் உட்பட	நிர்ணய விலை: ரூ.27,95,000/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) முன்வைப்புத் தொகை: ரூ.2,79,500/– (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து ஐந்நூறு மட்டும்)	30.05.2025 அன்று முற்பகல் 11 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் (எண்ணிக்கை வரம்பின்றித் தானாக 5 நிமிடம் கால நீட்டிப்படையும் வகையில்)

ஆய்வு தேதி மற்றும் நேரம்: 19.05.2025 அன்று முற்பகல் 11.00 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில் | **அடையாளப்பூர்வ கவாதீன தேதி: 13.03.2025**

கடனீட்டுச் சொத்தின் விவரம்: பட்டா எண் 1693, சர்வே எண் 31/5, ராமிரெட்டிப்பட்டி கிராமம், தாரமங்கலம் சார்பதிவு அலுவலக வட்டாரம், ஓமலூர் தாலுகா, சேலம் மாவட்டம் 636501. **எல்லைகள் மற்றும் அளவீடுகள் பின்வருமாறு:** விற்பனையாளரின் எஞ்சிய சொத்துக்கு **வடக்கில்,** வையாபுரி சொத்துக்குக் **கிழக்கில்,** சாலைக்குத் **தெற்கில்,** விற்பனையாளரின் எஞ்சிய சொத்துக்கு **மேற்கில்.** மொத்தப் பரப்பளவு 0.05 ஏக்கர்.

குறிப்பு:– 1) ஏல விற்பனையானது இணைய வழியில் https://sarfaesi.auctiontiger.net எனும் இணையத்தளத்தின் வாயிலாக நடத்தப்படும். செல்லத்தக்க மின்னணுச்சல் முகவரி, அடையாளச் சான்று மற்றும் புகைப்படச் சான்று, நிரந்தரக் கணக்கு எண் (PAN) அட்டை ஆகியவற்றை வைத்திருக்கிற, முன்வைப்புத் தொகையைக் (EMD) கேட்பு வரைவோலை (DD) / NEFT / RTGS மூலம் முழுமையாகச் செலுத்திய ஏலதாரர்கள் மட்டுமே இந்த "இணைய வழி மின்–ஏலத்தில்" கலந்து கொள்ளத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
2) ஆர்முள்ள ஏலதாரர்கள் தங்கள் முன்வைப்புத் தொகையைக் (EMD) கேட்பு வரைவோலை / RTGS / NEFT மூலமாகப் பின்வரும் கணக்கில் செலுத்த வேண்டும்: பயனாளர் பெயர்: நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், வங்கி: பாரத ஸ்டேட் பாங்க், கணக்கு எண் : 65226845199, SARFAESI– Auction, NIDO HOME FINANCE LIMITED, IFSC எண்: SBIN0001593.
3) முன்வைப்புத் தொகையுடன் கூடிய இணைய வழி ஏலப் படிவ விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யக் கடைசி நாள்: 29.05.2025.
4) விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய வருகை புரிய வேண்டிய இணையத்தளம் https://sarfaesi.auctiontiger.net அல்லது தயவு செய்து தொடர்பு கொள்க: திரு. மௌலிக் ஸ்ரீமாலி, தொ.பே.: +91– 6351896643/9173528727, உதவி மின்னஞ்சல் முகவரி: Support@auctiontiger.net

கைப்பேசி எண்: 9962784954/8667572466
தேதி: 28.04.2025

ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர்
நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது)

மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற..... முதல் பக்க தொடர்ச்சி

இன்றைக்கு நம்மோடு இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக, தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர், முன்னாள் அட்டர்னி ஜெனரல் முகுல் ரோத்தகி இந்த விழாவிற்கு வர இயலவில்லை. அவர் இங்கு இல்லையென்றாலும் தமிழ்நாடு அரசின் சார்பில் என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர், முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் அபிஷேக் சிங்விக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்டு தெரிவிக்கிறேன். உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர், ராகேஷ் திவேதி மற்றும் உச்சநீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞரும் மாநிலங்களவை உறுப்பினருமான வில்சன் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்டுகிறேன்.

வழக்கறிஞர் பெருமக்களே உங்களின் வாழ்க்கையில் எத்தனையோ பெரிய பெரிய வழக்குகளைப் பார்த்திருப்பீர்கள். வெற்றியும் பெற்றிருப்பீர்கள். தனிநபர்கள், அமைப்புகள், தனியொரு மாநிலம் கூட அந்த வழக்குகளில் வெற்றி பெற்றிருக்கும். ஆனால், இந்த வழக்கின் வெற்றி என்பது, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும், அனைத்து மாநில மக்களுக்கும், மக்களாட்சிக்கும் கிடைத்திருக்கும் வெற்றி. இந்த மண்ணில் மக்களாட்சி இருக்கும் வரைக்கும், இந்த வழக்கும், வலுவான வாதங்களை வைத்த நீங்களும் பேசப்பட்டுக் கொண்டே இருப்பீர்கள். வழக்குத் தாக்கல் செய்த தமிழ்நாடும், வாதிட்ட வழக்கறிஞர்கள், தீர்ப்பளித்த நீதியரசர்களும் வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருப்போம் என்பது உறுதி. இந்த தீர்ப்பு கொடுத்திருக்கும் புத்துணர்ச்சி மற்றும் நம்பிக்கையோடுதான் மாநில சுயாட்சிக் குழுவை நாம் உருவாக்கியிருக்கிறோம். இந்திய ஜனநாயகத்தில் மக்களாட்சிக்கு வலு சேர்க்க, அண்ணா வலியுறுத்தி, கலைஞர் முழக்கமாக வடித்து கொடுத்ததுதான் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற இலக்கு. அந்த இலக்கை வென்றெடுக்க இந்தத் தீர்ப்பு வழிகாட்டி இருக்கிறது. மாநில சுயாட்சியைப் பெறுவோம், கூட்டாட்சி இந்தியாவை உருவாக்குவோம். இவ்வாறு அவர் பேசினார். அதனை தொடர்ந்து வழக்கறிஞர் வில்சன் பேசுகையில், எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தங்களது பதவியை பயன்படுத்தி இடையூறு ஏற்படுத்தும் ஆளுநர்களுக்கு எதிராக வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழகத்துக்கு மட்டுமின்றி அனைத்து மாநிலங்களுக்கு மானது என தெரிவித்தார்.

மேலும் வழக்கறிஞர் ராகேஷ் திவேதி, ஆளுநர் என்பவர் மாநிலங்களில் அமைக்கப்படும் அமைச்சரவைக்கு ஆலோசனைகள் வழங்கலாமே தவிர, தனது வரம்பு மீறி நடந்து கொள்ளக்கூடாது. தற்போது உச்சநீதிமன்றம் அதை சரி செய்துள்ளது என குறிப்பிட்டார்.

இறுதியாக வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி பேசுகையில், "பாராட்டு விழாவில் எங்களுக்கு செங்கோல் வழங்கப்பட்டது. ஆனால் உண்மையாக செங்கோலுக்கு தகுதியுடையவர் முதல்வர் ஸ்டாலின் தான். பெரியார், அண்ணா, கருணாநிதியை தொடர்ந்து முதல்வர் ஸ்டாலினும் தமிழகத்தை சரியான பாதையில் வழிநடத்தி கொண்டிருக்கிறார்" என பேசினார்

இந்நிகழ்வில் மூத்த வழக்கறிஞர்கள், முன்னாள் நீதிபதிகள், அமைச்சர்கள், எம்பிக்கள், எம்எல்ஏக்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

குரூப் 4 ரயில்வே தேர்வு

32,000 காலி பணியிடங்களுக்கு சுமார் 1 கோடி பேர் விண்ணப்பம்

தேர்வு மிகவும் கடினமாக இருக்கலாம் என எதிர்பார்ப்பு

சென்னை, ஏப்.28: குரூப் 4 ரயில்வே தேர்வுக்கு சுமார் 1 கோடி பேர் விண்ணப்பித்துள்ளனர்.

ரயில்வே குரூப் 4 என்பது இந்திய ரயில்வேயில் பல்வேறு நிலைகளில் உள்ள பதவிகளை நிரப்புவதற்கான ஒரு ஆட்சேர்ப்பு செயல்முறையாகும். இது பொதுவாக "குரூப் டி" என்று குறிப்பிடப்படுகிறது.

இந்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், 10ம் வகுப்பு அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும். இந்த பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான வயது வரம்பு, 18 முதல் 36 வயது வரை இருக்கும். இந்திய ரயில்வே குரூப் டி ஆட்சேர்ப்பு இயக்கத்தில் ரயில்வே முழுவதும் பல்வேறு நிலை 1 பதவிகள் உள்ளன, இதில் டிராக் மெயின்டெய்னர் கிரேடு-IV, அசிஸ்டன்ட் பாயிண்ட்ஸ் மேன் மற்றும் எலக்ட்ரிக்கல், மெக்கானிக்கல் மற்றும் சிக்னல் மற்றும் தொலைத்தொடர்பு போன்ற துறைகளில் தொழில்நுட்ப உதவியாளர்கள் போன்ற பணியிடங்கள் அடங்கும்.

இந்த குரூப் டி பதவிகளுக்கு மொத்தம் 32,438 காலியிடங்கள் இருப்பதாக ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (ஆர்ஆர்பி) அறிவித்திருந்தது. ஆனால் இதற்கு விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையை பார்த்தால், தேர்வு செயல்முறை மிகவும் கடினமாக இருக்கும் என்பதைக் குறிக்கிறது. ஆன்லைன் பதிவு சுற்று முடிவடைந்த நிலையில், குரூப் டி ஆட்சேர்ப்புக்கான தேர்வு தேதிகளை ஆர்ஆர்பி விரைவில் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், 32,438 காலிப் பணியிடங்களுக்கு சுமார் 1 கோடியே 8 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். இதில், அதிகபட்சமாக மும்பையில் அதிக விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளதாக ரயில்வே தேர்வு வாரியம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரர் எண்ணிக்கை (முக்கிய நகரம் வாரியாக)...	
அகமதாபாத்	6,39,269
அஜ்மீர்	3,59,409
பெங்களூரு	2,75,307
போபால்	4,51,096 (ஆங்கிலம்)
புவனேஸ்வர்	2,65,840
பிலாஸ்பூர்	4,32,897
சண்டிகர்	11,60,404
சென்னை	11,12,922 (ஆங்கிலம்)
கோரக்பூர்	3,62,092
குவஹாத்தி	10,72,841
கொல்கத்தா	7,93,572
மும்பை	15,59,100
பாட்னா	3,33,972
பிரயாக்ராஜ்	8,61,666,
ராஞ்சி	1,81,339
செகந்திராபாத்	9,60,697 (ஆங்கிலம்)
மொத்தம்	1,08,22,423

அதிமுக கூட்டணி கதவை திருமாவளவன் எப்படி மூட முடியும்?

நயினார் நாகேந்திரன் கேள்வி

சென்னை, ஏப்.28: திருமாவளவன் ஒரு கூட்டணியில் இருக்கிறார். அவர் எப்படி அதிமுக கூட்டணி கதவை அடைக்க முடியும் என்று பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதமர் மோடியின் 121வது மனதின் குரல் நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதை முன்னிட்டு, தமிழக பாஜ சார்பில் அக் கட்சியின் மாநில செயலாளர் சதீஷ்குமார் தலைமையில் சென்னை திருவல்லிக்கேணி நடுக்குப்பம் பகுதியில் தனியார் மண்டபத்தில், மனதின் குரல் நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்யப்பட்டது. இதில் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, பொது மக்களுடன் நிகழ்ச்சியை கண்டுகளித்தார்.

இதில், பாஜ துணை தலைவர் கரு.நாகராஜன், மாநில செயலாளர் கராத்தே தியாகராஜன் உள்பட ஏராளமானோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற நயினார் நாகேந்திரனுக்கு, மீன்பிடி வலைகளால் செய்யப்பட்ட மாலை அணிவிக்கப்பட்டு, சிறிய அளவிலான படகு ஒன்றும் நினைவு பரிசாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பங்கேற்ற ஏராளமானோருக்கு சைவ, அசைவ உணவுகளும் பரிமாறப்பட்டன.



தொடர்ந்து, நயினார் நாகேந்திரன் அளித்த பேட்டியில் கூறியதாவது: பிரதமர் மோடி தனது 121-வது மனதின் குரல் நிகழ்ச்சியில், காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் நடந்த தாக்குதல் சம்பவம் குறித்து பேசினார். 27 பேரை ராணுவ உடையில் வந்து பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றதை மோடி சுட்டிகாண்பித்து வருத்தமுடன் பேசினார். இதற்கு தக்க பதிலடி கொடுப்போம் என்றும் மோடி உறுதியுடன் கூறியிருக்கிறார்.

கூட்டணி ஆட்சி, அதிகாரத்தில் பங்கு என்று கூறி விஜயை கூட்டணிக்கு அழைத்த அதிமுக, த.வெக. கவிற்கான கதவுகளை மூடிவிட்டதாக விசிக தலைவர் திருமாவளவன் கூறி இருக்கிறார். திருமாவளவன் ஒரு கூட்டணியில் உள்ளார். அவர் எப்படி அதிமுக கூட்டணியின் கதவை மூட முடியும். அடுத்தவர் கூட்டணி கதவுகளை மூட திருமாவளவன் யார்? திருமாவளவன் முதலில் அவரது வீட்டு கதவை அடைக்கட்டும் அடுத்தவர் வீட்டை பற்றி அவர் கவலைப்பட வேண்டாம். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

முன்னதாக பாஜ சார்பில், நடுக்குப்பம் அவ்வை சண்முகம் சாலையில் மனதின் குரல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், போலீசார் அனுமதி வழங்கவில்லை. இந்த நிலையில் சாலையில் அமைக்கப்பட்ட மேடை, எல்.இ.டி. திரை மற்றும் ஒலிபெருக்கிகளையும் போலீசார் அகற்றினர். இதனால், போலீசாருக்கும், பாஜவினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பேச்சுவார்த்தைக்கு பிறகு, அருகாமையில் உள்ள தனியார் மண்டபத்தில் நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

TATA
டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு முகவரி: 11ஆவது தளம், டவர் A, பெனின்சுலா வர்த்தகப் பூங்கா, கண்பத்ராவ் கடம் மார்க், லோயர் பரேல், மும்பை – 400013.
கிளை முகவரி: டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட், 1ஆவது தளம், நூற்றாண்டு சதுக்கம், # 6A, டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், சென்னை – 600 024.

அசையாச் சொத்து விற்பனை அறிவிப்பு
(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) கீழ்)
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(6) மற்றும் விதி 9(1) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துக்களை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை, 30 நாள் மின்–ஏலம் அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உப–கடன்தாரர், அல்லது அவர்தம் சட்டப்பூர்வ வாரிசுகள்/பிரதிநிதிகள் (கடன்தாரர்கள்) ஆகியோருக்கு குறிப்பாக வழங்கப்படும் அறிவிப்பாவது, **டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிட். (TC